

# தற்போது நிலவும் அமைதி நிலை புலிகளின் பலத்தாலேயே ஏற்பட்டது

''தற்போது நிலவும் அமைதி நிலை அரசினதோ அல்லது ஏந்தவொரு அரசியல் கட்சியினதோ மனமாற்றுத்தால் ஏற்பட்டதல்ல. எமது பலத்தினலேயே ஏற்பட்டது சம பலத்துடனே அல்லது அதற்கு மேலான பலத்துடனேதான் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதுஎமக்கு தற்போது முக்கியமான தேவை எமது பலத்தை அதிகரிக்க வேண்டும் என்பது தான்'! இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகளின் பிரதித்தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா மாத்

—6 ஆம் பக்கம் பார்க்க


பக்கங்கள் ஆறு | விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 41 | சனி | 17-03-1990 | (பங்குனி 04) | ஷஃபான் 19


## வரதர் மோரீஷியஸில் உள்ள கரும்புத்தோட்டத்தில் - ரஞ்சன்

வரதராஜப் பெருமாள் சிலவேளை மொரீஷியஸில் கரும்பு பயிரிட்டுக்கொண்டிருப்பார். என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன்விஜேரட்ண தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியளார் மாநாட்டில் 'வரதர்இப்போதுஎங்கே' எனச் செய்தியாளர் ஒருவர் கேட்டபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். வரதர் எங்கே இருக்கிறார் என்பதுபற்றி எனக்கு அக்கறையில்லை எனவேதான் அவர் எங்குள்ளார் என இந்தியாவிடம் நாம் கேட்கவில்லை எனவும் அமைச்சர் ரஞ்சன் கூறினர்.

# வரதர், பத்மநாபா, சகாக்களிடம்

# பணம் முதல் கத்தி வரை பறிமுதல்

## தமிழ் அகதிகள் வன்செயலில் ஈடுபடாதிருக்க ஒரிஸா மாநிலத்தில் பலத்த பாதுகாப்பு

இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்ற வடகிழக்கு மாகாண முன்னுள் முதல்வர் வரதர் ஈ பி. ஆர் எல் எப் செயலாளர் பத்மநாபா அவர்களின் சகாக்கள் ஆகியோரிடம் இருந்த சகல பொருட்களும் இந்திய அதிகாரிகளால் துறைமுகத்தில் வைத்துப் பறிக்கப்பட்டதாக இந்திய பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்களிடமிருந்து பணம், பெறுமதியான பொருட்கள் யாவும் அப்புறப்படுத்தப் பட்டன என்றும் பேனுக்கத்தி கூட ஆயுதம் என்ற ரீதியில் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஈ.பி.ஆர்.எல்.எப் அகதிகள் தங்கியுள்ள முகாமிலேயே 1960-ம் ஆண்டு வாக்கில் கிழக்குப் பாக்கிஸ் தான் அகதிகள் தங்கியிருந்தனர் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

இதேசமயம் ஒரிஸாவில் தங்கியுள்ள அகதிகள் எவரும் அம்மாநிலத்தில் இருந்து கொண்டு வன்முறைகளில் இறங்குவதை தடுக்கும் முகமாக தற்போது அப்பகுதிகளில் பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை இலங்கை அகதி

— 6 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே

யாழ் - கொழும்பு
இரவு
தபால் ரயில்
நேரடி றிப்போர்ட்

...3 ஆம் பக்கத்தில்

## யாழ்மாவட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சீல் வைப்பு

அடுத்தமாதம் முதல் யாழ் மாவட்ட எரிபொருள் நிலையங்களின் மீற்றர்கள் சீல் வைக்கப்படவுள்ளன.

யாழ் செயலக நிலுவைகள் அளவைகள்பிரிவு இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுவருகின்றது. அடுத்த மாத முதல்வாரத்தில் ஆரம்பிக்கப்படும் இவ் வேலைகளின் போதுசகல பெற்றேல்நிலையங்களும் கவனத்திற் கெடுக்கப் படுமென அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (03)

## சீமேந்து தொழிற்சாலைக்கு சொந்தமான எக்ஸ்புளோடரை மீளதருமாறு இந்தியபடையிடம் கோரிக்கை

பாரிய கல்உடைக்கும் இயந்திரமான எக்ஸ்புளோடரை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திடம் திருப்பி வழங்குமாறு கூட்டுத்தாபன உயரதிகாரி இந்திய இராணுவத்திடம் கேட்டுள்ளார்

முன்னர் சிமெந்துக் கூட்டுத்தாபனத்திடம் இருந்த கல் உடைக்கும் இயந்திரமான எக்ஸ்புளோடரை 83ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்தினர். பொறுப்பேற்று தம்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## இவர்கள் விரைவில் சந்திப்பு

(வவுனியா)

தற்போது வட கிழக்கிலுள்ள இரு இயக்கங்களின் தலைவர்கள் விரைவில சந்திக்கவுள்ளனர். இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து இச்சந்திப்பு இடம்பெறும் எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமாக புரிந்துணர்வின் அடிப்படையில் ஒரு உடன்பாட்டுக்கு இரு இயக்கங்களும் வரலாமெனவும் அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

## ஹாபர் வியூ ஹோட்டலிலிருந்து இலங்கை ராணுவம் வெளியேறும்

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சிமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான ஹாபர் வியூ ஹோட்டலில் இருந்து இன்று முற்றாக வெளியேறுவார்கள் எனத் தெரியவருகிறது. சிமெந்து தொழிற்சாலை உயரதிகாரி ஸ்ரீலங்கா இராணுவ உயரதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்தே இவ்வாறு ஹாபர்வியூ

—6 ஆம் பக்கம் பார்க்க

## வரதர் இந்தியா வருவதை இந்திய அரசு விரும்பவில்லை

வடகிழக்கு மாகாண சபை முதல்வர் வரதராஜப் பெருமாள் இந்தியா வருவதை இந்திய அரசு விரும்பவில்லை என இந்து பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

வடகிழக்கு மாகாணசபை

— 6-ம் பக்கம் பார்க்க

## புலிகளின் மக்கள் முன்னணியின் தலைமை செயலகம் விசுவமடுவில்

(வவுனியா)

வடக்கு - கிழக்கு மாகாண விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணியின் அரசியல் தலைமைச் செயலகம் வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவு-பரந்தன் வீதியில் விசுவமடு என்னுமிடத்தில்

— 6 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் மாவட்டத்தில் சகல நிவாரண கொடுப்பனவும் புதுவருடத்திற்கு முன் வழங்கி முடிக்க நடவடிக்கை

எதிர்வரும் புதுவருடத்திற்கு முன்னர் வங்கிகளுக்குப் பெயர்ப்பட்டியல் அனுப்பப்பட்ட சகலருக்கும் நிவாரணப் பணம் வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது

வங்கி ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாகவே இதுவரை காலமும் இந்த நிவாரணக் கொடுப்பனவு மந்தகதியில் இடம் பெற்று வந்ததாகத் தெரியவருகிறது.

இந்த நெருக்கடி நிலைமையை தடுப்பதற்காக யாழ் செய

—6 ஆம் பக்கம் பார்க்க

## இந்தியப்படை வெளியேறிய பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையை மீள ஆரம்பிக்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

''இந்திய இராணுவம் பலாலிஆசிரியகலாசாலைக் கட்டிடத்தை விட்டு வெளியேறியுள்ளது. கட்டிடம் காலியாகவுள்ளது. இரு ஆசிரியகலாசாலைகள் இயங்க வசதிகள் இல்லாத கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முடக்கப்பட்டுள்ள பலாலி ஆசிரிய கலாசாலையை உடனடியாக பலாலிக்குமாற்றவேண்டும்.'' இவ்வாறு கோரும் மஜர் ஒன்றை இலங்கைத்தமிழ் ஆசிரிய சக்கப்

—6 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்மாவட்ட ஆசிரியர் பயிலுனர் முதல்பட்டியலில் தெரிவாகி 2-ம்பட்டியலில் விடுபட்டோர் அவலநிலை

யாழ் மாவட்ட பயிலுநர் ஆசிரியர் நியமனத்தின் முதல் பட்டியலில் தெரிவுசெய்யப்பட்டு இறுதிப்பட்டியலில் விடுபட்டவர்களுக்கு மேன்முறை... முதல்பட்டியலில் தெரிவு செய்யப்பட்ட பின்னர் இவர்கள் கல்வித்திணைக்களத்திற்கு தமது நியமனத்தை உறுதி செய்ய சென்றபோது நியமனம் பெற்றுள்ளகாரணத்தை வைத்து மேன்முறையீடு செய்ய அனுமதிக்கப்படவில்லை.

தற்போது மேன்முறையீடு கல்வித்திணைக்களத்தில் ஏற்கப்படாததால் பட்டியலில் விடுபட்டோர் எங்கே மேன்

—6 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகள்
## (வெளிவாரி)
## கல்வியாண்டு 1990/91

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

★ கலைமாணி (B.A.)
★ விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) (B.Sc.)
★ வணிகமாணி (B.Com)

க பொ த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

புதிய பிரிவு விரிவுரைகள் 01-04-1990-ல் ஆரம்பமாகின்றன
விண்ணப்ப முடிவுத் திகதி 20. 03. 1990

விபரங்களுக்கு

உதவிப்பதிவாளர்

## பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

மாணவர் கவனத்திற்கு:

✶ பல்கலைக்கழகங்களின் முன்னணி விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும் ஒரே நிறுவனம் யாழ்நகரில் இதுவே.

✶ வணிகமாணி பட்டப்பாட நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பதிவுகளைச் செய்து கொள்ளல் வேண்டும்.

03108

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் யாழ்ப்பாணம்

## A|L 90

சனி - ஞாயிறு மீட்டல்
வினா - விடை வகுப்புக்கள்

ஆரம்பம்: 24. 3, 90

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | குமாரவேல் |
| வர்த்தகம் | — | தேவா |
| கணக்கியல் | — | யோகராஜா, இந்திரன் |
| அளவையியல் | — | சயந்தன், கேசவன் |
| புவியியல் | — | குணராஜா |
| அரசியல் | — | குமார் |
| தமிழ் | — | குழந்தை |
| இந்துநாகரிகம், இந்துசமயம் | } | அருள் நங்கை |

## A|L 90 பகல் நேர வகுப்புகள்
## ஆரம்பம் 20, 3, 90 (8 மணி)

**SPOKEN ENGLISH**
**by BRITTO**

சனி, ஞாயிறு, பகல்நேர வகுப்புகள் நடைபெறுகின்றன.

03138

# “தொழிற் பயிற்சிகள்”

✶ ENGINEERING DRAWING
பொறியியல் மாணவர்களிற்கு விசேடமாக பயிற்சியளிக்கப்படும்,

✶ DIPLOMA IN DRAUGHTSMANSHIP

| | |
|---|---|
| I Building Design | III Building Materials |
| II Construction | IV Building Quantity |
| காலம் 5 மாதம் | V Engineering Drawing |

✶ COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE
60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:-4 மாதம்.

★ றேடியோ, ரெலிவிஷன் வீடியோ, டெக் றிப்பயறிங்
சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக, திருத்தப்படுமுறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் : 4 மாதம்

✶ றிவைண்டிங்
மின் மோட்டர், மின் விசிறி, ரான்ஸ்போமர் றிவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம் 4 மாதம்

★ எலெக்றிக்கல் வயறிங்
வீட்டுமின்சாரவேலை,மின்சாரப்பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்
காலம்-: 2 மாதம்

குறிப்பு :-முன்பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் தொடர்ந்து பயில்வதற்கு உடனடியாக நேரில் தொடர்பு எடுக்கவும்.

**பயிற்சிகள் ஆரம்பம்:** 21,03.90 [கிழமைநாட்கள்]
24.03.90 [சனி, ஞாயிறு]

பயிற்சி முடிவில் சித்தியடையும் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA

## JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லிவீதி,(றெயில்வேகடவை அருகாமையில்) யாழ்ப்பாணம்

03146

## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

# கேள்வி அறிவித்தல்

1990-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 27ம் திகதி காலை 10.00 மணிவரை சுகாதார சேவைகள் பிராந்தியபணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைக்கு ரூபா 750,000/- திற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய மறுநாள் 28ம் திகதி காலை 10.30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரச கரும வேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்

இக்கட்டிடவேலை செய்ய விரும்புவோர் 1990ம் ஆண்டு மார்ச்சு மாதம் 23ம் திகதி காலை 10-30 மணி வரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். திருப்பித்தரக் கூடிய வைப்புப்பணமாக ரூபா 500/-ம் திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா 100/-ம் காசுக்கட்டளை மூலம் செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

குறிக்கப்பட்ட கட்டிடவேலைகள்

1) மத்திய மருந்தகம் — அளவெட்டி
2) மத்திய மருந்தகம் — உடுவில்
3) பதிவு வைத்திய அதிகாரி அரசவிடுதி — அச்சுவேலி

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்ட பின் கடித உறையில அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் ''சுகாதாரப் பகுதிக் கட்டிட வேலை'' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப்பணிமனையில் கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும். அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்பட வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்கப்பட்டதென்று அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வாரகாலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப்பணத்தை செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல் வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம். தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகையில் 5% ஒப்பந்தத்தின்படி வேலையை திருப்திகரமாக செய்து முடிக்க பிணைப்பணமாக யாழ். பிராந்திய பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்டவேண்டும். வேலை திருப்திகரமாக முடிந்தபின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல் அல்லது முற்றுகநிராகரித்தல் ஆகிய உரிமைகளும் அனைத்து தீர்மானங்கள், இறுதி முடிவுகள் யாவும் கேள்விச்சபைத் தலைவரைச் சார்ந்தது.

ந. கனகசபை
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

15-3-90

03131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயநாதம்

சனிக்கிழமை 17 — 03 — 1990

நல்வாக்கு

சுயநலமும், தன்னகங்காரமும், சர்வாதிகாரமும் துர்ப்புத்தியும் கொண்ட மந்திரியால் ஆட்சி அலைக் கழிந்து நாடு நாசமடையும்.

-விவேக சிந்தாமணி.

ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

## அரசு திருந்தவில்லை

வன்னிப்பகுதியிலுள்ள மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள கட்டுக்கரைக்குளம், அகத்திமுறிப்புக்குளம், வியாழக்குளம், பாவற்குளம் ஆகிய தமிழ்ப் பிரதேசங்களுக்குரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நீண்டகாலமாக வவுனியா நீர்ப்பாசனப் பிரதிப்பணிப்பாளரின் அலுவலகத்தின் கீழேயே இயங்கி வந்தன.

ஆனல் அண்மையில் இத்திட்டங்கள் யாவும் திடீரென அனுராதபுரம் நீர்ப்பாசனப் பிரதிப்பணிப்பாளரின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதனுல் இப்பகுதித் தமிழ் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தமது தேவைகளுக்காக எல்லாம் அநுராதபுரத்திலேயே நாடவேண்டியுள்ளது.

அங்கு இன, மத, மொழிப் பிரச்சினைகளை இவர்கள் எதிர்கொள்கிறார்கள்.

திடீரென மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கை தொடர்பாக ஆராயாமல் விட்டுவிட முடியாதுள்ளது.

எமது வரலாற்றில் 'பகமைப் புரட்சி' என்ற பெயருடன்தான் முதன் முதலில் தமிழர் பாரம்பரியப் பிரதேசங்கள் மீதான சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பமாயின அதுவும் எமது எல்லைப் பிரதேசமான அம்பாறையில்.

பின்னர் படிப்படியாகத் தொடர்ச்சியாக, திட்டமிடப்பட்ட ரீதியில் தமிழர் பாரம்பரியப் பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டுச் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன.

தமிழ்ப் பேசும் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களைத் துண்டாடும் முயற்சியில் வடக்கு-கிழக்கு எல்லைப்புற மாவட்டங்களிலிருந்து எமது நிலங்கள் அபகரிக்கப்பட்டன.

உதாரணமாக முல்லைத்தீவில் மணலாற்றுப் பிரதேசம் திடீரென வெலி ஓயாவாக மாற்றப்பட்டது. 84 இலிருந்து 87 வரை மூவாயிரம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர்.

இந்நிலையில்தான் 87 இல் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு இந்திய அரசு இலங்கைக்கு வந்தது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் செய்து கொண்டது.

ஆனல், இதுவரை தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்ததாய் இல்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் மேலும் இரண்டாயிரம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இக் காலப்பகுதியில் முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து வெளியேறிய அகதிகள் மட்டும் ஏறத்தாழப் பதினையாயிரம் பேர்.

இந்திய-இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட மாகாணசபையால் கூட இவற்றைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

வடக்கு-கிழக்கை இணைப்பதற்கான ஒரு விதியைத்தானும் போடும் உரிமை மாகாண சபைக்கு இருக்கவில்லை.

மொத்தத்தில் இந்திய அரசு தோல்வியை ஒப்புக்கொண்டு வெளியேறிக் கொண்டிருக்கிறது.

இந்நேரத்தில் இவ்வாறு தமிழ்ப்பகுதிகள் சிங்களப் பகுதிகளுடன் இணைக்கப்படுவது என்பது தமிழ் மக்களுக்கு இலங்கை அரசு மீது சந்தேகத்தையும், எரிச்சலையும் ஊட்டும் நடவடிக்கையாகும்.

தமிழ் மக்கள் தமது பிரதேசங்களைப் பேச்சு வார்த்தை மூலம் பெற வேண்டுமா? அல்லது போராடித்தான் பெற வேண்டுமா என்பதை அரசு தீர்மானிக்க வேண்டும்.

---

இரவுத் தபால் புகையிரதத்தில் நமதுநிருபர் விசிட் (1)

# பாய்ந்தேற கால்கள் ஆயத்தம்

# சீற்பிடிக்க இங்கே சிறுயுத்தம்

நீண்ட கால இடைவேளைக்குப் பின்னர் யாழ்-கொழும்பு இரவு தபால் புகையிரத சேவை கடந்த 9-ம் திகதி ஆரம்பமாகியது. நீண்ட காலத்திற்குப் பின்னர் இரவு புகையிரதத்தில் பயணம் செய்யும் பிரயாணிகளின் உணர்வலைகள் இரவுப் பயணத்தில் அவர்கள் மற்றவர்களுடன் மனம் விட்டும் உரையாடல்கள். பயணத்தின் கஷ்ரங்கள் என்பவற்றை அறிய நானும் கொழும்பில் இருந்து யாழ் நகர் நோக்கிச் செல்லும் முதலாவது இரவுத் தபால் புகைபிரதத்தில பயணம் செய்யப் புறப்பட்டேன்...

நேரம் மாலை 6. 30 ... கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்திற்குள் நுழைகின்றேன்... பிரயாணச் சீட்டைப் பெறுவதற்காக பிரயாணிகள் கியூவில் நிற்கின்றனர். நீண்ட நாட்களுக்குப் பிறகு முதன் முறையாகச் செல்லும் இப்புகையிரதத்தில் மிகவும் குறைவான பிரயாணிகளே செல்வார்கள் என நினைத்த எனக்கு ஏமாற்றம். புகையிரதத்திற்குள் நிற்க முடியாத சனக்கூட்டம்.

எல்லோரது முகங்களிலும் மகிழ்ச்சிப் பிரகாசம் ... அவர்களின் பூரிப்பை வார்த்தைகளால் இலகுவில் வடித்து விடமுடியாது. இப்போது கோட்டை புகையிர நிலையத்தில் தமிழ் ஒலிப்பதைக் கேட்க முடிகிறது. அடிக்கடி மூன்று மொழிகளிலும் அறிவித்தல்கள் கொடுக்கப்படுகின்றன.

கோட்டை புகையிரத நிலைய ஒலிபெருக்கியில் தமிழ் உச்சரிப்புக் கொலை நடந்தாலும் ... தமிழில் அறிவித்தல்கள் வழங்கப்படுவதை பாராட்டாமல் இருக்க முடியாது...

பிரயாணச் சீட்டைப் பெறுவதற்காக நாமும் கியூவில் நின்றோம். மாத்தயா, .. ஏன் கியூவில நிண்டு கஷ்ரப்படுறீங்க... என்னட்ட சல்லியத் தாங்க சிக்கிரமா ரிக்கட் எடுத்துத்தாறன் என்றார் ஒருவர்' அவரைப் பார்த்தால் புகையிர நிலையத்தில் கடமையாற்றும் சிற்றூழியரைப் போன்று இருந்தது ... இவர் இங்குதான் கடமையாற்றுகின்றாரா அல்லது போலி மனிதரா தெரியவில்லை...

எமக்குப் பக்கத்தில் நின்ற இளைஞர் ... ''ரிக்கட் எடுக்க இவங்களட்ட காசு குடுத்திடாதையும்... இப்ப கொஞ்ச நேரத்திற்கு முதலில ஒருத்தர் ரிக்கட் எடுக்க இவங்களட்ட காசு குடுத்திட்டு நிண்டார் ... ரிக்கட் எடுத்துத் தாறன் எண்டவன் காசை வாங்கிக்கொண்டு மாறியிட்டான் ஆளையே காணயில்ல''

எனக்கு இளைஞர் கூறியதை கேட்டுக் கொண்டிருந்த ...ரிக்கட் பெற்றுத்தரவா என்று கேட்ட மனிதர்... 'நாங்க அப்படிச் செய்ய மாட்டம் தொர... விருப்பம் எண்டா தாங்க எடுத்துத்தாறன்... கியூவில நின்று கஷ்ரப்படுறீங்களே...பாவமா இருந்திச்சிது, ...உதவி செய்ய நினைச்சா...''

இவரது ஏமாற்று வேலை எம்மிடம் பலிக்காது என்று தெரிந்தவுடன் இடத்தை விட்டு மெல்ல அகன்றார்...

பிரயாணிகள் மீது பாவம் பார்க்கும்... மனிதர்களைப் பார்த்தீர்களா..? இவர்களது ஏமாற்று வலையில் சிக்கி தினம் தினம் ரயில் பயணிகள் தவிக்கின்றார்கள்... இன்று உலகில் எவரையுமே நம்ப முடியவில்லை ... எதுபோலி ... எது உண்மை என்று அறிவதே கடினமாகியுள்ளது...

''நல்லவன் போல் நடித்து ஏமாற்றுபவர்களே இன்று நாட்டில் அதிகமாகக் காணப்படுகின்றார்கள்... இவர்களை இனங்கண்டு ''நாங்கள்தான் எச்சரிக்கையாக நடக்க வேண்டும்... இன்றேல்... !...?

யாழ் பயணிகளின் நலன்கருதி நாலு அல்லது ஐந்து ரிக்கட் கவுண்டர்களில் பிரயாணத்திற்கான ரிக்கட்டை வழங்குகிறார்கள்... விபரம் புரியாதவர்கள்... இப்படி ஏமாற்றுப் பேர்வழிகளிடம் ரிக்கட் பெறப் பணத்தைக்கொடுத்து ஏமாறுகின்றார்கள்.

அடிக்கடி புகையிரத நிலைய ஒலிபெருக்கி மூலம் மூன்று மொழிகளிலும் எந்த எந்த இலக்க ரிக்கட் கவுண்டர்களில் யாழ்ப்பாணத்திற்கான ரிக்கட்டைப் பெறலாம் என அறிவித்தல்களை வழங்குகின்றார்கள். புகையிரதத்தில் 'சீற்' பிடிக்க நினைப்பவர்களே... குறுக்கு வழியில் ரிக்கட் பெற முனைகிறார்கள்... பலர் ஏமாற்றப் படுகின்றார்கள்..

நாம் கியூவில் நின்று ரிக்கட்டைப் பெற்றுக்கொண்டு... வாசலில் பொதிகளைப் பரிசோதிப்பவர்களிடம் எமது ரவலிங் பாக்கைக் கொடுக்கிறோம்... எனக்கு அருகில் அனுராதபுரத்திற்குச் செல்ல வேண்டிய இரு இளைஞர்களுடைய பொதிகளைப் பரிசோதிக்கின்றார் ஒருவர். துருவித் துருவிச் சோதித்துப் பார்க்கிறார்... அவர்கள் இருவரும் சோதனை முடிந்து உள்ளே செல்கின்றார்கள்... எனது ரவலிங் பாக்கையும் ... வாரியாகப் பரிசோதித்து விட்டு உள்ளே அனுப்புகின்றனர்...

''நான் கடந்த காலங்களிலும் கோட்டைப் புகையிரத நிலையத்தில் இருந்து பயணம் செய்தவன்... அன்றைய காலங்களில் தமிழர்களின் பொதிகளைத் துருவித் துருவி ஆராய்ந்தது இன்னும் என் மனக்கண்முன் நிழலாடுகின்றது நிலைமை இவ்வளவு விரைவாகத் திசைமாறும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. இப்போது எதிர்மாறாகச் சோதனை நடக்கிறது... இந்த நிலை தொடருமா...?

கோட்டைப் புகையிரத நிலையத்தின் முதலாம் மேடையில் பயணிகள் எல்லோரும் யாழ். இரவு தபால் புகையிரதத்தை எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றனர். புகையிரதம் இன்னும் முதலாம் மேடைக்கு வரவில்லை. முதலாம் மேடையில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் தேர்த்திருவிழாவுக்குப் பக்தர்கள் திரண்டது போன்ற காட்சியையே காண முடிந்தது.

தூரத்தில் ஓர் வெளிச்சம் தெரிகிறது. எல்லோரும் மூடை முடிச்சுக்களை தூக்கி புகையிரதத்தில் ஏறத் தயாராகின்றனர்........ ''புகையிரதத்தில் பயணம் செய்பவர்களுக்காக சீட் பிடித்துக் கொடுக்க'' வாலிபர்களும், வாலிபர்களைப் போன்ற தோற்றமுடைய முதியவர்களும் தயாராகிறார்கள். நூறு மீற்றர் ஓட்டப் போட்டிக்கு ஆயத்த நிலையில் நிற்கும் வீரர்களைப் போன்று இவர்கள் புகையிரதத்தில் 'சீட்' பிடிக்க ஆயத்தமாகி விட்டார்கள்

புகையிரதம் மேடைக்கு வருகிறது ........புகையிரதம் நிறுத்தப்படுவதற்கு முதல் சீற் பிடிப்பவர்கள் மற்றவர்களை இடித்துத் தள்ளிக் கொண்டு பாய்கின்றனர்.... ..........

சிலர் இவர்களுடன் ஈடு கொடுக்க முடியாமல் புகையிரத மேடையை முத்தமிடுகின்றனர்.........'சீற்' பிடிக்கப் போட்டிபோட்டு ஏறிபவர்களின்.........செருப்புக்கள்சில... ...தண்டவாளத்தில் விழுகின்றன.........செருப்புப் போனல் என்ன.........எமக்கு சீட் முக்கியம் என .........சீட் பிடிக்கும் முயற்சி நடக்கிறது ........பாய்ந்து ஏறியவர்களுக்கு வெற்றி .........வீரப் போராட்டம் நடத்த முடியாதவர்கள் தோல்வியைத் தழுவுகின்றனர்.

''கடந்த காலங்களில் 'சீட்' பிடிக்க பாய்ந்து ஏறியவர்கள் சிலர் கால்களை இழந்த சம்பவங்கள், உயிர் இழந்த சம்பவங்கள் நடந்திருக்கின்றன......... ...என்பது சுட்டிக் காட்டுதற்குரியது.

நாம் பிரயாணிகள் ஏறிய பின் ஆறுதலாக ஏறி ஒவ்வொரு பெட்டியாக மெல்ல நடக்கின்றோம்............''இந்த சீட்டில் ஆள் இருக்கிது... .... நாலு சீற்றுக்கு ஒருவர் உரிமை கோருகிறார் ............ அடுத்த பெட்டிக்குச்செல்கிறோம் .....''

இந்த சீற்றில் யாரும் இருக்கினம.........என்றார் ஒருவர்... ஓம் என்றார் சீட் பிடித்தவர்... ......இவ்வளவு சீட்டும் உமக்க ......எடும் பாக்க...... இருவருக்கும் வாக்கு வாதம் நடக்கிறது ...... .. இவ் வேளையில் பாதுகாப்பு ஊழியர்கள் வருகின்றனர்........ நடந்ததைத்

(5 ஆம்பக்கம் பார்க்க)

## நேரடி றிப்போட்

---

## "கண்ட பொண்ட மொக்குத் தெண்ட"...

ஒருவர் ஒரு பொதியுடன் புகையிரத நிலையத்திற்குள் நுழைகின்றார். அவரைப் பரிசோதிப்பர்கள் சோதனையிட்டு அனுப்புகின்றனர். ரிக்கற் வெட்டுபவர் உள்ளே நுழைய அனுமதி கொடுக்கவில்லை. இந்தப் பொதியை புகையிரதத்தில் கொண்டு செல்ல முடியாது புகையிரத பாசல் கந்தோரில் கொடுத்து பாசல் மூலம் அனுப்புங்கள் என்கிறார். அவர் அங்கே செல்கிறார். அந்த அலுவலகம் மூடப்பட்டிருக்கிறது. மீண்டும் புகையிரதநிலையம் வருகிறார் ரிக்கட் வெட்டுபவரிடம் சென்று நிலைமையை சொல்கிறார் அவர் சொன்ன பதில் ''கண்ட பொண்ட மொக்குத் தெண்ட'' ...... சாப்பிடக் குடிக்க ஏதாவது தாங்க......பயணி சில சில்லறைகளைக் கொடுத்துவிட்டு பிச்சைக்காரர்கள் வீதியில்தான் உலவுகின்றார்கள் என்றால் கோட்டு சூட்டுடனும் புகையிரதநிலையத்தில் நிற்கிறார்கள் என்று முணுமுணுத்தவாறு செல்கிறார்.

---

## உதரன்

## கன்ரீனில் 3 மடங்கு விலை

புகையிரதத்தில் தேநீர்சாலை ஒன்று இருக்கிறது அந்த தேநீர்ச் சாலைக்கு சென்று ஒரு பொருளை வாங்கினால் ஒரு விலை அதே தேநீர்ச் சாலையை சேர்ந்தவர் கொண்டுவந்து விற்றால் கன்ரீனில் சென்று வாங்கும் விலையை விட 50 சதம் விலை குறைவு. சில வேளைகளில் பொருட்கள் மூன்று மடங்கை விட அதிகம்...... இதை யாரிடம் சொல்லி அழ... என்று சேட்கின்றார்கள் பிரயாணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டையில் நிற்கும் பஸ்கள் விரைவில் வீதிக்கு வரும்

# அறுபது பழைய பஸ்களை திருத்தியமைக்க மத்திய போக்குவரத்துச்சபை நிதிஉதவி

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அறுபது பஸ்களைத் திருத்தியமைக்க அரசாங்கம் மத்திய போக்குவரத்துச் சபையின் மூலம் பல மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்நிதியுதவியைக் கொண்டு தற்பொழுது கட்டையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இப்பஸ் வண்டிகள் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இந்த பஸ்களையாவும் இம் மாத இறுதிக்குள் திருத்தியமைக்கபபட்டு சேவைக்கு விடப்படுமெனவும் தெரிவிக்சப்பட்டது.

இதேவேளை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் நாளாந்த வருமானம் தற்பொழுது இருபது சதவிகிதத்தால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டையில் நிற்கும் பஸ்சளும் சேவைக்கு வரவிருப்பதனுல் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் வருமானத்தில் மேலும் அதிகரிப்பு ஏற்படுமெனவும் கூறப்பட்டது (14)

# வடமராட்சி மாணவிக்கு வலப்புறத்தில் இருதயம்



வடமராட்சியை சேர்ந்த பதினைந்து வயது மாணவியொருவருக்கு வழமைக்கு மாருக வலப்புறத்தில் இருதயம் அமைந்துள்ளமை கொழும்பில் மருத்துவ பரிசோதனையின் மூலம் தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி, புதுத்தோட்டம்வீதியைச் சேர்ந்த புகழினி சுகுணபாலயோகன் என்ற மாணவியே வலப்புறத்தில் இருதயத்தைக் கொண்டிருக்கிருர். இருதயத்தில் இவருக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக இவ்வருடம் ஜனவரி மாதம் கொழும்பு அரசினர் வைத்திய சாலைக்கு இவர் அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு பரிசோதனைகளை மேற்கொண்ட இருதய வைத்திய நிபுணர் டாக்டர். பி என். தேனபடு, இருதய சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் ஏச். எஸ். பேரேரா ஆகியோர் இக் குறைபாட்டைகண்டறிந்தனர்,

செல்வி புகழினிக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டுமெனவும் இச்சத்திர சிகிச்சையை கனடா, அமெரிக்கா அல்லது ஜேர்மனி போன்ற நாடொன்றில் தான் செய்து கொள்ள முடியுமெனவும்டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு ஏறக்குறைய பத்துலட்சம் ரூபா செலவு ஏற்படுமெனவும் தனது மகளை வெளிநாடு கொண்டு சென்று சிகிச்சை அளிப்பதற்கு வேண்டிய நிதியை கருணையுள்ள பொதுமக்களும், பொதுஸ்தாபனங்களும் ஏனைய அமைப்புக்களும் சேகரித்து தந்துதவ வேண்டுமெனவும்புகழினியின் தந்தை கா, சுகுணபாலயோகன் முரசொலி சாபிலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கூட்டம்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் 19-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மகாபொல புலமைப் பரிசில் பெறுகின்ற முதலாம் வருட மாணவர்கள் புலமைப் பரிசிலை பண்டாரகமவிற்கு சென்று பெற்று வருவது சம்பந்தமாக இக்கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதால் அனைத்துக் கலைப்பீட முதலாம் வருட மகாபொல புலமை பரிசில் பெறும் மாணவர்களையும் இதில் தவருது கலந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

கரைச்சி ப. நோ. கூ; சங்கம்

# ஒரு மூடை தரமான நெல்லை ஐந்நூறு ரூபாவுக்கு கொள்வனவு

விவசாயிகளிடமிருந்து தரமான நெல்லை 500 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதாக கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கம் அறிவித்துள்ளது, இக்கொள்வளவு கடந்த 14 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

சிலர் தங்கள் நெல்லை நேரடியாக யாழ்ப்பாணம் கொண்டு செல்வதால் மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சிரமமானதாக இருக்குமென மேற்படி சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. எஸ். சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார் யாழ். மாவட்டத்திலுள்ள இருபத்தி நான்கு கூட்டுறவு சங்கங்களும் தங்களது சங்கத்தினூடாக நெல்லை கொள்வனவு செய்தால் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது சுமுகமானதாக இருக்குமெனவும் அவர் கூறினர். (4)

## உரும்பிராய்க்கு தொலைபேசி இணைப்பு

உரும்பிராய் தபால் நிலையத்திற்கு வெளியூர் தொடர்பிற்கான தொலை பேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது உரும்பிராய். ஊரெழு, கோப்பாய் அபிவிருத்தி சபை உப அலுவலகங்களைச் சேர்ந்த பொது மக்கள் தமது தொடர்புத் தேவைகளுக்கு இத் தொலைபேசியைபயன்படுத்திக் கொள்ளமுடியுமெனதொலைத்தொடர்புத்திணைக்களவட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ்-கொழும்பு இ.போ.ச பஸ் சேவை நிறுத்தம்

யாழ்-கொழும்பு இ.போ ச பஸ்சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கொழும்பிற்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பி வருவதினுலும் தற்போது இரவு தபால் ரயில் சேவை நடைபெற்று வருவதினுலும் கொழும்பிற்கான பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது,

## ரயில் நிலையத்திற்கு தளபாடங்கள் விரைவில் வரும்

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு மணிக்கூடு, மற்றும்ஒலிபெருக்கிகள், தளபாடங்கள் போன்றவை வெகு விரைவில் வந்து சேரவுள்ளன.

இந்தப் பொருட்களுக்கான மதிப்பீடு நேரடியாக அவதானிக்கப்பட்டுக் கொழும்பு தலைமை ரயில்வே திணைக்களத்திறகுஅனுப்பி வைக்கப்பட்டுள்ளன இவை வெகுவிரைவில் இங்குவந்துசேருமென எதிர் பார்க்கப்படுகின்றது, (03)

## சுவையான செய்திகள்

### இந்த மாத்திரை இங்கு வராதா?

அவுஸ்ரேலியாவில் உள்ள சிட்னி நகரில் ஒருநாடக அரங்கில் ரசிகர்கள் விசிலடித்து அமர்க்களம் செய்து வந்தனர் இதனுல்நிகழ்ச்சிகளை நடாத்த முடியவில்லை. இதற்கு எப்படி முடிவு கட்டுவது என்று நாடக அரங்கு முதலாளி யோசனை செய்தார். ஒருமருந்துக்கம்பனியை அணுகிதொண்டையைக் கட்டிக்கொள்ளச் செய்யும் ஒரு மாத்திரையை தயார் செய்யச்சொன்னுர். இந்தமாத்திரையை வாயில் போட்டுக்கொண்டால் சத்தம் வெளியேவராது அதாவது விசிலடிக்க முடியாது. மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டால் தான் டிக்கட் கொடுப்பார்கள். இப்பொழுது இந்தமாத்திரையின் புண்ணியத்தால் இந்த அரங்கில்நிகழ்ச்சிகள் அமைதியாக நடைபெறுகின்றன.

### ஆயுள் முழுவதும் ஆஸ்பத்திரியில்

மார்தா என்ற 103 வயது பெண்மணிசிலவருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவில்காலமானுர். இந்த பெண்மணி 99 வருடங்கள் ஆஸ்பத்திரியில் நோயளியாகவே கழித்திருக்கின்ருர். வாழ்நாளில் இத்தனைபெரும்பகுதியை ஆஸ்பத்திரியில் செலவழித்தவர் வேறுஎவரும் உலகில் இல்லை. என்று கூறப்படுகின்றது. 99 வருடங்களாக எந்தநோய்க்கு வைத்தியசாலையில் இவர்சிகிச்சை பெற்ருர் என்றஇரகசியம்இதுவரைவெளியாகவேயில்லை.

## நம்மைச் சுற்றி நடப்பவை

புதிய கிராமசேவையாளர் பிரிவுகளை அமைக்கும் திட்டத்தின்கீழ் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வட்டு. கிழக்குப்பகுதி கடந்தவருடம் தனியான ஒரு பிரிவாக உருவாக்கப்பட்டது.

10-03-89 முதல் செயற்பட்டுவரும் இப்புதிய பிரிவிற்கு ஒரு வருட காலத்திற்குள் ஆறு தடவைகள் கிராம சேவையாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிருர்கள்.

அதாவது சராசரி இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் இங்கு இந்தத்திடீர் இடமாற்றங்கள் கடந்த காலங்களில் இடம் பெற்றிருக்கின்றன, இப்பகுதியைச் சேர்ந்தவரும் செயலகத்தில் நிர்வாக... பதவியிலிருப்பவருமான ஒரு அதிகாரியே இந்த நாடகத்திற்கு நாயகனுக இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

ஒருவேளை இப்படியாவது தனது ஊரிற்கு ஒரு 'கின்னஸ்' சாதனையைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென அந்த அதிகாரி விரும்புகின்ருரோ?

பிந்திக்கிடைத்த செய்தி:- அப்பிரிவிற் தற்பொழுது கடமை புரிந்து கொண்டிருக்கும் ஏழாவது கிராம சேவையாளருக்கும் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டு விட்டதாம்.

சும்மா சொல்லக்கூடாது - நம்ம அதிகாரிகள் 'வேகமாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கிருர்கள்.

★ கிறிசன்

பல்கலைக்கழக

# ஆராய்ச்சி நிதியத்திற்கு ஜனதிபதி நிதியம்உதவும்

சகல பல்கலைக்கழகங்களினதும் நன்மை கருதி ஆராய்ச்சி நிதியம்ஒன்றை இவ்வருடத்தில் ஆரம்பிப்பதற்கு கல்விச்சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந் நிதியத்திற்குத் தேவையான பணம் ஜனதிபதிநிதியத்தில் இருந்தும் வெளிநாட்டு நிதியத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளப்படும்.

பல்கலைக்கழக மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடும் போது அவர்களுக்குத்தேவையான பணம் இந்த நிதியத்தில் இருந்து பெற்றுக்கொடுக்கப் படும்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

# அரசாங்க அறிவிப்பு இங்கு என்னவாச்சு?

ஆசிரியர்
முரசொலி

அப்பியாசக் கொப்பிகளுக்குத் தட்டுப்பாடு இல்லை என்றும், அது கட்டுப்பாட்டு விலையில் தான் தற்போது விற்கப்பட வேண்டும் என்றும் அடிக்கடி அரசாங்கச்செய்திகள் கூறுகின்றன. ஆனுல் மாணவர்களாகிய நாம் தொடர்ந்தும் அதிக விலைகளைக் கொடுத்தே அவற்றைப் பெற்றுவருகின்ருேம் இன்னும் கொப்பிகளின் விலை குறைந்தபாடில்லை எப்போது கொப்பிகளின் விலை குறையும்? இது குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனங்கொள்வார்களா?

நல்லூர் — எஸ், சுந்தரேசன்

# இந்த ஆசிரியைக்கு மட்டும் இப்படியொரு சலுகையா?

ஆசிரியர்,
முரசொலி

01. 01. 1984 க்குப் பின்னர் ஆசிரிய நியமனம் பெற்று சேவையிலுள்ளபோது பட்டம் பெற்ருேருக்கு 01. 10. 1988 இலிருந்து பட்டதாரிச்சம்பளம் வழங்கப்படும் என 07. 02. 1989-ம் திகதியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் மூலம் கல்வி அமைச்சு அறிவித்தது. அதன்படி அப்படியான ஆசிரியர்களுக்கு 01. 10. 1988 இலிருந்து பட்டதாரிச்சம்பளம் வழங்கப்படுகிறது. ஆனுல் கண்டி மாவட்டத்திலுள்ள நாவலப்பிட்டி கதிரேசன் குமாரமகாவித்தியாலத்தில் 15. 04 1985 இல் க. பொ. த. உயர்தர தராதரப்பத்திரமுள்ள ஆசிரியராக நியமனம் பெற்ற ஆசிரியை ஒருவருக்கு 15. 07. 1987 இலிருந்து பட்டதாரிச் சம்பளம் வழங்கப்படுகிறது. இது எந்த சுற்றுநிருபப்படி என்பதுதான் கேள்விக்குறியாகவுள்ளது; இந்த ஆசிரியையின் நெருங்கிய உறவினர்தான் கண்டிமாவட்ட கல்வித்திணைக்களத்திலுள்ள ஒரு ,பிரதம கல்வி அதிகாரி என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கல்வி அதிகாரிகள் ஆசிரியர்களை தனது உறவினர், பிறத்தியார் என வேறு பிரித்து அவர்களுக்கு உதவி செய்தல் கூடாது. எல்லோரும் ஆசிரியர்கள் என எண்ணி சேவை செய்ய வேண்டும். இவ்விடயத்தில் தமிழ் ஆசிரியர் சங்கம் தலையிட்டு இப்படிப்பட்ட பட்டதாரிகளுக்கு, மேற்கூறப்பட்ட ஆசிரியைக்கு பட்டதாரிச்சம்பளம் வழங்கிய அதே திகதியிலிருந்து வழங்க ஆவனசெய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

பருத்தித்துறை — எம். வசந்தீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## யாழ்.தெற்குசிறந்தவீரர்கள்

அண்மையில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியால மைதானத்தில் நடந்த யாழ். தெற்கு கோத்தணி மெய்வல்லுநர் போட்டியில் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு 11 வயது ஆண் பி. எடிசன் பிரசன்ன யாழ்/ புனிதரேக்ஸ் வித்தியாலயம் 13 வயதுஆண் இணைந்த வீரர்கள் 1 ஜி எடின் ஜோஜ் யா/புனிதயோசவ் வித்தியாலயம் 2. யோ. மேரியாணிஸ் யா.புனித சாள்ஸ் மகா/வித்தியாயம் 15 வயது ஆண்சி கி.பேஞட்யா/ புனித சாள்ஸ் ாகவித்தியாலம் 17 வயது ஆண் லி அமலராசன் யா/ புனித யேம்ஸ் மகாவித்தியாலயம் 19 வயது ஆண் இணைந்த வீரர்கள் 1 சி, அனிஸ்ரஸ் யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் 2. ஆ.லெ. பியரீசன். யா/ புனித யேம்ஸ் மகாவித்தியாலயம் 11 வயது பெண் ம. மேரி கிளான்சியா யா / புனித அந்தோனியர் மகளிர்வித்தியாலயம் 13வயது பெண் குதர்சினியா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் 15 வயது பெண் ம. பவிதா யாழ் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் 17 வயது பெண் பா. வனிதா யாழ் கொழும்புத்துறை இந்து மகாவித்திய லயம் 19 வயது பெண் செ. ஜெஸ்சின் யா/புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம் அஞ்சல் ஓட்டம்எல்லாவயதுப் பிரிவுகளிலும் கூடிய புள்ளி பெற்ற பாடசாலை ஆண்கள் யாழ் புனித சாளிஸ் மாகவித்தியாலயம் பெண்கள் யா கொழும்புத்துறை இந்து மாக வித்தியாலயம். (16)

## பரந்தன் இளைஞர்கழகம் வெற்றி

கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கான உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் பரந்தன் இளைஞர்வட்ட மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பரந்தன் இளைஞர் வட்டக் கழகம் உமையாள்புரம் வளர்பிறை விளையாட்டுக்கழகத்துடன் மோதியது. இப்போட்டி இறுதியில் பரந்தன் இளைஞர் வட்டக் கழகம் 3—1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

# இன்று நாள் எப்படி?

மேடம்: களஸ்திர சுகம், புதுத்தொழில், திடீர்ப்பிரயாணம், வாகனசுகம், விவாகநிச்சயம், வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம்.

இடபம்: சத்துருபயம், வாகன மாற்றம், திடீரப்பிரயாணம், புதுத்தொழில், விருந்துபசாரம், கல்விய ற்சித்தி.

மிதுனம்: உயர்பதவி, திடீர்ப்பிரயாணம், இராஜமரியாதை, காதலர் மகிழ்ச்சி, தேடியவர் வருகை.

கடகம்: மாதா வழியுதவி, வாகன மாற்றம், உயர்பதவி, உத்தியோக இடமாற்றம், புதுத்தொழில்.

சிங்கம்: புகழ் தேடிவரும், உயர் பதவி, கலைஞர்கள் கௌரவிக்கப்படல், தேடியவர் வருகை.

கன்னி: பணவருவாய், புதுத்தொழில், தெய்வஆசி, காதலர் மகிழ்ச்சி, வணிகர்கள் இயந்திரத்தொழில் இலாபம்.

துலாம்: பெண்களாற்பகை, உயர்பதவி, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

விருச்சிகம்: தொழில் நஷ்டம், இடப்பிரிவு, வீண்பகை, வாகனமாற்றம், சிநேகிதர் பகை, புதுத்தொழில்.

தனுசு: இருதொழில், இலாபம், உயர்பதவி, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

மகரம்: உயர்பதவி, வாகனச்சேர்க்கை, வணிகர்கள் இயந்திரத்தொழில் மூலம் இலாபம்.

கும்பம்: திடீர்ப் பிரயாணம் மூத்தசகோதர வழியுதவி, பிரிந்தவர்கள் ஒன்று சேருவர்.

மீனம்: உடல்ரோகம், இராஜபயம், வாகனமாற்றம், உயர் பதவி மூலம் பகை, வெயூர்ப் பிரயாணத்தடை, தடைப்பட்ட பணம் கிடைக்கும்.

யாழ். சோதிடர்
ச அரியநாயகம்

## மட்டு. அரச அதிபரை பொதுமக்கள் தேடுகிறார்கள்

கடந்த எட்டு மாதத்திற்கு மேலாக மட்டக்களப்புக் கச்சேரியில் உள்ள அரசாங்க அதிபரின் அலுவலக் கதவுகள் திறக்கப்படவில்லை. அரசாங்க அதிபர் ''வெளியே'' என்ற விளம்பரப் பலகையையே எந்நேரமும் காணமுடிகின்றது. கடந்த வருடம் ஜூன் மாதத்தில் மட்டக்களப்புக் கச்சேரியில் புனர்வாழ்வு புனரமைப்பு ராஜாங்க அமைச்சரின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மகாநாட்டில் அமைச்சருடன் கொழும்பிலிருந்து விமானமூலம் அரசாங்க அதிபர் மட்டக்களப்பிற்கு வருகை தந்து அம்மகாநாட்டில் கலந்து கொண்டார். அதன் பின் அமைச்சருடன் விமானத்தில் கொழும்பு சென்ற அரசாங்க அதிபர் கடந்த எட்டுமாதமாக மட்டக்களப்பிற்கு வரவேயில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுமக்களுக்கு கொடுக்கப்படவேண்டிய கொடுப்பனவுகள் தாமதமாகிறது. அத்துடன் சிலகருமங்களை மேற்கொள்ளச் செல்லும் பொதுமக்கள் ''அரசாங்க அதிபர் இல்லை. அரசாங்க அதிபரைக் கேளுங்கள்'' என சில அதிகாரிகளின் பதிலினால் ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய அவலநிலை காணப்படுகிறது. (05)

## சித்தி

1989 ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கு உரும்பராய் சந்திரோதய வித்தியா சாலையிலிருந்து தோற்றிய ஐந்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்

## பாய்ந்தேற...

3 ஆம் பக்கத்தொடர்ச்சி...

கேட்கின்றனர்......அந்த வாலிபன் பிடித்த ஆசனங்களை ஆசனம் இல்லாதவர்களுக்கு கொடுக்கின்றார்கள் ...... வாலிபர் சோகத்தோடு அமருகிறார் .........

பாதுகாப்பு ஊழியர்கள் அடுத்த பெட்டிக்குச் செல்கின்றனர்.........ஆசனம் பிடித்து வைத்திருப்பவர்களின் இடத்தில் ஆசனம் கிடைக்காதவர்களை அமரச்செய்கின்றனர்.

பத்து ரூபா கொடுத்தால் சீட் பிடித்துத் தர தயாராக இருப்பவர்கள் கோட்டைப் புகையிரத நிலையத்தில் இருக்கிறார்கள் ......... இவர்களிடம் வெள்ளவத்தையில் இருந்து வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆங்கிலம் பேசி தமிழை மறந்தவர்கள் சீற் பிடித்துத்தர பணம் கொடுக்கிறார்கள். சீற் பிடித்துக் கொடுத்தால் சீற் பிடித்துக் கொடுப்பவருக்கு பத்து ரூபா கொடுக்க வேண்டும்.

இதைத் தடுக்க புகையிரத பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் முயலுகிறார்கள்......இவர்களை இனங்கண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிடித்துவிட்டால் ........... இவர்களை எழுப்பி விட்டு இடம் இல்லாதவர்களுக்கு இருக்க இடம் கொடுக்கிறார்கள்...... ஆனால் இடம் பிடித்தவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் சென்றதும் தான் பிடித்த ஆசனத்தில் இருப்வரை மிரட்டும் சம்பவம் யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும்புகையிரதத்தில் அடிக்கடி நடக்கும் நிகழ்வுகளாகும் .........


A|L 91
சனி — ஞாயிறு
11.30 Pure-நுண்கணிதம் Calculus
12.30 App - நிலையியல் (உராய்வு)
திரு. மகேஸ்வரன்
B. Sc. (Hons)
ஆரம்பம்: 11, 3. 90
BOND
Institutes
58A. ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
03101


## மகாப்பொல புலமை பரிசில் வழங்கும் வைபவம் 1988/89 (25-03-1990)

மகாப்பொல புலமைப்பரிசில் வழங்கும் வைபவக் கொண்டாட்டங்கள் 25/03/90 தொடக்கம் 04/04/90 வரை பண்டாரகம மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற இருக்கின்றன மார்ச் 25-ம் திகதி மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் புலமைப் பரிசில்களை வழங்குவார். இந்த வைபவத்திற் பங்கேற்கும்படி யாழ் பல்கலைக்கழக முதலாம் வருட (1988/89) மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த வைபவத்திற் பங்குபற்ற விரும்பும் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இம்மாதம் 20-ம் திகதிக்கு முன் யாழ். பல்கலைக்கழக மாணவரவை ஊடாக சிரேஷ்ட மாணவ ஆலோசகருடன் தொடர்பு கொள்ளும்படி அறிவுறுத்தப் படுகிறார்கள். போக்குவரத்து தங்குமிட வசதிகள் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்.

பதிவாளர்

### கசிப்பு செய்யும் வேலை

## போதையில் வீதிதரிசனம் தினசரி நடக்கிறது

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டைப் பகுதியில் கசிப்பு வியாபாரம் அதிகரித்துள்ளது இதனால் மாலை நேரங்களில் கசிப்பு போதையில் தினசரி பலர் வீதியோரங்களில் சுயநினைவின்றி கிடக்கின்றார்கள்.

அத்துடன் பொதுமக்களும் இவர்களால் சிரமமடைகின்றார்கள் இப் பகுதியில் கசிப்பு பாவனை முற்றாக ஒழிக்கப்படவேண்டுமென்றும் அன்றாட உழைப்பாளிகளே கசிப்புபாவனையாளர்களாயிருப்பதால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் இப்பகுதி பிரமுகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தற்போது இரவு தபால் புகைபிரதத்திற்குள்ளும் நடைபெறுகிறது......''சீற் பிடித்துக் கொடுப்பவர்களிடம் சிறிய கத்தி ஒன்றும் காணப் படுவதாக பிரயாணின் தெரிவிக்கின்றனர்.........

முடிச்சு மாறிகளும் புகையிரத மேடைச் சீட்டைப் பெற்று தாராளமாக நடமாடுகிறார்கள், இரவு புகையிரத சேவை ஆரம்பித்த முதல் நாளே நான்கு பிரயாணிகளுடைய பணம் முடிச்சுமாறிகளால் அபகரிக்கப் பட்டுள்ளது. ......

புகையிரதத்தில் சீற் பிடித்து விடவேண்டும் என்ற அவசரத்தில் வருவோரிடமே முடிச்சுமாறிகள் தம் கைவரிசையைக் காட்டிவருகின்றனர்......

மூன்றும் வகுப்புப் பெட்டிகளைக் கடந்து இரண்டாம் வருப்புப் பெட்டிகளுக்குள் நுழைகிறேன்.... அங்கே அட!

— (தொடரும்) .........

## இன்றைய நிகழ்ச்சிகள்


### வண்ணையில்

யாழ். இலக்கிய வட்டத்தின் ஆதரவில்'குறமகள் கதைகள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா இன்று காலை 9. 30 மணிக்கு யாழ். வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் அநுவை நாகராசன், செங்கை ஆழியான், சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வரதர், டொமினிக்ஜீவா, சு. இராசநாயகன், கலாநிதி இ. பாலசுந்தரம், திருமதி பத்மா சோமகாந்தன், சிற்பி ஆகியோர் இவ்வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ளுவர்.

### தெல்லிப்பழையில்

கலை, இலக்கியக் களத்தின் இருபத்தேழாவது ஒன்றுகூடல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிமண்டபத்தில இன்று பிற்பகல் 3. 15 மணிக்குத் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் நடைபெறும், இந்த ஒன்றுகூடலில் க. சிதம்பரநாதனுடனை கலந்துரையாடல் இடம்பெறும்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் க. செ. கதிரேசு

(அரசாங்க ஒப்பந்தக்காரர்)

அன்னைமடியில் 23. 09. 1921 — இறைவனடியில் 15. 02, 1990

திதி: 17. 03. 1990

முள்ளியவளையில் தோன்றி இளம் வயசு தொடங்கி வவுனியாவில் கடமையாற்றிவிட்டு எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விண்ணுலகு சேர்ந்தீர்களே! உங்கள் நினைவால் ஏங்கித் தவிக்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

03118

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் ஆயுதம் குறித்து அஞ்சத்தேவையில்லை அன்ரன்

திருமலையில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுகிறார்கள். இவர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவது தலைவர்களைப் பாதுகாக்கவே என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளதாக இந்துப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுவது குறித்து எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும், அவர்கள் ஆயுதங்களுடன் நடமாடுவது தமது தலைவர்களைப் பாதுகாக்க மட்டுமே என்றும் அவர் தெரிவித்துள்ளதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# வல்வை சிதம்பரா கல்லூரி க.பொ.த.முடிவு இன்னும் இல்லை

(உடுப்பிட்டி)

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரியின் க.பொ.த. உயர்தரப்பரீட்சை முடிவுகள் நேற்று வரைவந்து சேரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கள் முதல் கல்வித் திணைக்களத்தினால் சகல பாடசாலைகளுக்கும் பரீட்சை முடிவுகள் அனுப்பப்பட்டு வருகின்ற போதிலும் கடந்த ஐந்து தினங்களாக மேற்படி கல்லூரியின் பரீட்சை முடிவுகள் இதுவரை கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பாடசாலை அதிபர் கே. செல்வவிநாயகம் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்ட போது பரீட்சை முடிவுகள் அனுப்பப்பட்ட பொதிகள் இடம்மாறியிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. (39)

# வன்னி மாவட்டத்தில் இவர்கள் இன்னும் நிவாரணம் பெறவில்லை

(வவுனியா)

கடந்த வன்செயல்களினால் உண்மையாக பாதிக்கப்பட்ட எமது பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. ஆனால் கனடா, சவூதி, டுபாய் மற்றும் வெளிநாடுகளில் உள்ளவர்களும் அரச ஊழியர்களும் வசதிபடைத்தவர்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வேப்பங்குளம் அல்-ஹிச்சிரா விளையாட்டுக் கழகம், பட்டாணிச்சி புளியங்குளம் முஹியித்தீன் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை ஆகிய இரு ஸ்தாபனங்களும் வவுனியா அரச அதிபருக்கும் உதவி அரச அதிபருக்கும் அனுப்பிவைத்துள்ள நீண்டதொரு மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

பட்டாணிச்சூர், வேப்பங்குளம், பட்டகாடு ஆகிய கிராமங்களிலிருந்து வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து பாதிக்கப்பட்டு மீளகுடியமர்ந்தவர்களுக்கு எதுவித நிவாரணமும் இதுவரை வழங்கப்படவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (11)

## வரதர்...

கள் ஒரிஸா மாநிலம் வந்துள்ளதால் தமது உரிமைகள் தட்டிக்கழிக்கப் பட்டுவருவதாக அம்மாநில ஆதிக்குடிவாசிகள் நடாத்திவரும் போராட்டத்திற்கு பின்னணியில் இந்திராகாங்கிரஸ் உறுப்பினர்களும் இருப்பதாக ஒரிஸா மாநில முதலமைச்சர் பட்நாயக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# கருவிகளை உருவாக்கி அனுப்பும் தொழிற்சாலையாக யாழ் பல்கலைக்கழகம் அமையக்கூடாது - மாத்தயா

'பல்கலைக்கழகமென்பது சமூகத்திலிருந்து அந்நியப்பட்டு, கருவிகளை உருவாக்கி வெளிநாடுகளுக்கு அனுப்பும் ஒரு தொழிற்சாலை போன்று அமையாது சமூகத்துடனான உறவினை இறுக்கப்படுத்திக் கொள்ளவேண்டும் சமுதாயத்தை மேம்படுத்துவதற்கான பங்களிப்புகளை நல்கவேண்டும்'.

நேற்று பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராஜா மாத்தயா இவ்வாறு கூறினார். யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகத்தை மீளத் திறந்து வைத்து மாணவர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்து அவர் பேசுகையில்.

பல விதங்களில் சமுதாயத்திற்கு சேவை செய்யும் நோக்கத்துடனேயே எமது பிரதேச பல்கலைக்கழகத்தில் இந்த மறுமலர்ச்சிக் கழகத்தை மாணவர்கள் ஆரம்பித்தார்கள் அதற்கு எமது பூரணமான ஒத்துழைப்பும் இருந்தது கடந்த சிலகாலமாக இக்கழகம் இயங்கமுடியாதபடியான அச்சுறுத்தல்கள் இருந்து வந்தது எனவும் அவர் தெரிவித்தார் (4)

## யாழ் மாவட்டத்தில் சகல...

லக உத்தியோகஸ்தர்கள் வங்கிகளில் பகுதி நேரமாக கடமையாற்றவுள்ளார்கள். இவர்கள் நிவாரணக் கொடுப்பனவு சம்பந்தப்பட்ட வேலைகளையே மேற்கொள்வார்கள். இதன் மூலம் நிவாரண கொடுப்பனவு வேலைகள் துரிதப்படுத்தப்படும். என செயலகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன (03)

## இந்தியபபடை...

பொதுச்செயலாளர் திரு.த. மகாசிவம் கல்விஅமைச்சிற்கும் கல்விஅமைச்சின் ஆசிரிய கலாசாலைப்பிரிவிற்கும் அனுப்பிவைத்துதுள்ளார்.

அந்தமகஜரில் மேலும்கூறப்பட்டுள்ளதாவது சிங்கள ஆசிரிய கலாசாலைகள் விஸ்தரிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுகின்றன. அதேவேளை தமிழ் ஆசிரிய கலாசாலைகள் மூடப்பட்டும் முடக்கப்பட்டும் வருகின்றன. இன்றுதமிழ்ப்பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் போதாதிருக்கின்றனர். எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (37)

## தற்போது

தையா கூறினார். அவர்மேலும் பேசுகையில்

ஜனாதிபதி பிரேமதாஸ பிரச்சினைக்குரிய ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவார் என்றே எதிர்பார்க்கிறோம். ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கினாலேயே நாம் தேர்தலில் பங்கு கொள்ள முடியும் தேர்தலில் நாம் பங்கு பற்றாவிட்டாலும் மக்களுடனான எமது அரசியல் வேலைத் திட்டங்கள் தொடரும் புனரமைப்பு வேலைகள் நடக்கும்.

ஆரம்பகாலங்களில் எம் சகோதரர்களுக்கிடையே இருந்த நேசமுரண்பாடுகள் அந்நிய சக்திகளினாலேயே பகை முரண்பாடுகளாக மாற்றப்பட்டன என்று கூறினார்.

பல்கலைக் கழக மாணவர்களின் கேள்விகளுக்கும் திரு. மாத்தையா பதிலளித்தார். (04)

## எக்ஸ்புளோடரை ..

முடன் வைத்திருந்தனர். கல் உடைக்கும் வேளைகளில் மட்டும் இராணுவத்தினரே இதனைக் கொண்டுவந்து கல் உடைத்து விட்டு மீண்டும் தம்முடன் கொண்டுசெல்வர்.

87-ல் இந்திய இராணுவத்தினர் இவ்வியந்திரத்தை இலங்கை இராணுவத்தினரிடமிருந்து எடுத்தனர். தற்போது இந்திய இராணுவத்தினர் நாட்டை விட்டு வெளியேறுவதால் இவ்வியந்திரத்தை மீள சிமேந்துக் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## ஹாபர்வியூ...

ஹோட்டலிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வெளியேறுகிறார்கள்.

வெளியேறும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அருகிலுள்ள விகாரைக்குச் செல்வார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் முற்றாக வெளியேறியதும் ஹாபர் வியூ ஹோட்டல் இயங்கும் என சிமெந்து தொழிற்சாலை உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வரதர் இந்தியா...

ஈழப் பிரகடனத்தை மேற்கொண்டதாலேயே முதல்வர் வரதராஜப் பெருமாள் இந்தியா வருவதை இந்திய அரசு விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈழக் கோரிக்கையை இந்தியா ஒரு போதும் ஆதரிக்காது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புலிகளின் ..

அமைந்துள்ளது.

அரசாங்கத்தின் விசேட உத்தரவின் பேரில் தொலைபேசி இணைப்பும் இந்தச் செயலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என விடயம் அறிந்த வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (11)

## யாழ் மாவட்ட...

முறையீடு செய்வதென்று புரியாமல் விழிக்கின்றார்கள்.

இதேவேளை ஒரு சிலமாவட்டங்களில் முதல் பட்டியலில் தெரிவுசெய்யப்பட்டு இரண்டாம் பட்டியலில் விடுபட்டோர்களுக்கு மேலதிகமாக நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (03)


## உடனடித் தேவை

இலங்கை மின்சார சபையின் வட மாகாண பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்திற்காக, ஆகக்குறைந்தது 4000 சதுர அடி கொண்ட சகல வசதிகளையும் உள்ளடக்கிய பொது மக்கள் இலகுவாகத் தொடர்பு கொள்ளக்கூடிய யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வீடு அல்லது கட்டிடம் உடனடியாக வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ, தேவைப்படுகின்றது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;-

பிரதி முகாமையாளர்,
இலங்கை மின்சார சபை,
இல. 52, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

03149



## காலமானார்

## ரோகிணி விசுவலிங்கம்

கல்வியங்காடு வேளாதோப்பு க. விசுவலிங்கம் தம்பதியரின் மகள் ரோகிணி அகால மரணமடைந்து விட்டார் அன்னாரின் பூதவுடல் 1990-03-18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவர்களின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேளாதோப்பு. க. விசுவலிங்கம் குடும்பம்
கல்வியங்காடு சி. யோகநாதன் குடும்பம்

03152



## முழுநேர அல்லது பகுதிநேர அச்சுக் கோர்ப்பாளர்கள் முரசொலிக்குத் தேவை

ஆற்றல்மிக்க இரவுநேர அச்சுக்கோர்ப்பாளர்கள் தேவை தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேர அடிப்படையிலோ ''கொலம் சைஸ்'' அடிப்படையிலோ, பகுதி நேரமாகப் பணிபுரியக் கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம். பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்றுபவர்களுக்கு விசேட மாதாந்த ஊக்குவிப்புப் படியும் வழங்கப்படும்.

19–03–90 க்கு முன்

காலை 10 மணிக்கும் பகல் 12 மணிக்கும்

இடையில் பொதுமுகாமையாளரைச் சந்திக்கவும்

முரசொலி பப்ளிஷர்ஸ் பிறைவேற் லிமிற்றெட்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



DEAR REV. FR. RECTOR, STAFF, STUDENTS & OLD BOYS

"HAPPY ST. PATRICK'S DAY"

03115 From PATRICIAN


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 17-03-1990ல்] அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org